1981 பிப்ரவரி 28]

மதிப்பீடுகளையும், வரைபடங்களையும் அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர் கேட்கப்பட்டுள்ளார். அவை கிடைக்கப்பெற்றவுடன் இம்மாதிரிப்பண்ணைத் திட்டம் நிறைவேற்றப்படும். அதுமட்டுமல்லாமல், வேறு எங்கெங்கே இந்த மாதிரிப் பண்ணைகளை நிறுவலாம் என்பது குறித்தும் துறை ஆராய்ந்து வருகிறது. அந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிற இடங்களில் அந்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, மீன் வளர்ப்பதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்துகளிலும் பெரிய பெரிய தொட்டிகள் கட்டிவைத்தார்கள். அதில் இப்போது ஏதாவது மீன்கள் வளர்க்க வழி வகை செய்யப்பட்டுள்ளதா?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூலக் கேள்வி நம்புதாளை பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாகக் கேட்டிருக்கிறார்கள். மீன் வளர்ப்புத் திட்டத்தை எந்தெந்த வகையிலே செயல்படுத்த முடியுமோ அந்தந்த வகையிலே செயல்படுத்த விரிவான திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்க முடியும்.

பரிசுச் சீட்டு வருமானத்திலிருந்து பள்ளிக் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு.

*வினா எண். 302—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு நடத்தும் பரிசுச் சீட்டு வருமானத்தில் பள்ளி கட்டிடம் கட்ட நிதி தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இதுவரை பள்ளி கட்டிடம் கட்ட தமிழ்நாடு அரசு நடத்தும் பரிசுச்சீட்டு வருமானத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

[1981 பிப்ரவரி 28

திரு பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்த பரிசுச்சீட்டு நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கித் தந்தார்கள். பின்னால் அது நிறுத்தப்பட்டு, இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஏராளமான பள்ளிகளுக்கு கட்டிட வசதி இன்றைக்கு இல்லை. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும்போதே, பள்ளிக் கட்டிடங்கள், மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்ட இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது. ஆகவே, இனிமேலாவது கட்டிட வசதி இல்லாத தொடக்கப் பள்ளி உயர் நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டித்தர இந்த பரிச்சுச்சீட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த பரிசுச்சீட்டு மூலம் அரசுக்கு வருகின்ற தொகையில் 25 சதவீதத்தை பொது நிதியில் சேர்க்கிறோம். 75 சதவீதத்தை சிறப்பு நல நிதி என்று ஏற்பாடு செய்து அதில் ஒதுக்கி வைத்திருக்கிறோம். இந்த சிறப்பு நல நிதியிலிருந்து மக்களுக்குத் தேவைப்படுகிற சில முக்கியமான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த வகையில் கிராம குடிநீர் வழங்குத் திட்டம், அரிசனங்களுக்கு வீட்டு மனை கையகப்படுத்தும் திட்டம், தேசிய பாதுகாப்பு நிதித் திட்டம், வெள்ளம் மற்றும் புயல் நிவாரணத் திட்டம், முதலமைச்சரின் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், முன்னாள் இராணுவ நல நிதி ஆகிய வற்றிற்கு இதிலிருந்து நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு நல நிதியிலிருந்து ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் வழங்கலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்ட மாநில அரசு ஒதுக்கித்தருகிற நிதியிலிருந்தும், ஊராட்சி ஒன்றியம் பொது மக்கள் தருகின்ற நன்கொடைகளிலிருந்தும் வேறுபல வழிகளில் கிடைக்கின்ற நிதியிலிருந்தும் வழிமுறைகள் இருக்கின்ற காரணத்தால் பரிசுச்சீட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்படவில்லை. பள்ளிக் கட்டிடங்கள் கட்ட இதிலிருந்து நிதி ஒதுக்கலாம் என்று விதி இருப்பதால், இனிமேல் நிதி வசதி இருந்தால் அதுபற்றி ஆராயலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களை வேண்டுமானால் ஒன்றிய நிதியிலிருந்து கட்டிவிடலாம். ஆனால் உயர்நிலைப் பள்ளிகள் பல்லாண்டு காலமாக கட்டிட வசதி இல்லாமல் அனாதைப் பள்ளிகளாக காட்சி அளிக்கின்றன. பள்ளிக் கட்டிடங்களுக்கு நிதி வழங்க விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள், கட்டிட வசதி இல்லாத பள்ளிகளுக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்வார்களா?

1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள், மற்றவைகளுக்கெல்லாம் பரிசுச்சீட்டு நிதியிலிருந்து இதுவரை வழங்கப்படவில்லை. ஆனால் வேறுபல வழிகளில் அதற்கு நிதி பெறுகிறார்கள். ஒரு கார்ப்பரேஷன் அமைத்து அதன் மூலம் கடன் வசதி பெற்று, பள்ளிக் கட்டிடங்கள் கட்டலாமா என்ற ஆலோசனையும் இருக்கிறது. இன்றைக்கு ஆயிரக்கணக்கான பள்ளிகளுக்கு கட்டிட வசதி இல்லை. அவைகளுக்கு எல்லாம் இந்த பரிசுச்சீட்டு நிதியிலிருந்து கொடுக்க முடியாது. ஆகையால் ஆரம்பப்பள்ளிக் கட்டிடங்களுக்குத் தரலாம் என்ற விதி இருக்கிறது. வாய்ப்பு ஏற்படுமானால் அதை அரசு கவனிக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, இன்றைக்கு கிராமங்களிலும், நகரங்களிலும் 3 சீட்டு என்று சொல்வார்கள் அல்லது 12 சீட்டு என்று சொல்வார்கள் ; அப்படிப்பட்ட ஒரு பரிசுச்சீட்டு நடைமுறையில் இருக்கிறது. ஒரு ரூபாய் வைத்தால் 5 ரூபாய் கிடைக்கும், ஒரு ரூபாய்க்கு 5 ரூபாய் இலாபம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். அரசு அதை தடை செய்திருக்கிறது. அதைப்போலவேதான் அரசு நடத்துகிற பரிசுச் சீட்டும் இருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய் பரிசு என்று சொல்லி, 10 இலட்சம் ரூபாய், 8 இலட்சம் ரூபாய் வசூல் செய்கிற ஒரு சூதாட்டமாக இது இருக்கிறது. ஆகவே அரசு இந்த பரிசுச்சீட்டுத் திட்டத்தை தடை செய்யுமா ? இல்லாவிட்டால் அவர்களுக்கும் லைசென்ஸ் கொடுத்து, அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி பரிசுச்சீட்டு வருமானத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டுவது பற்றியது. உங்கள் கேள்வி பரிசுச்சீட்டுத் திட்டத்தைத் தடை செய்வது பற்றியதாக இருக்கிறது. எனவே இதை அனுமதிக்கவில்லை. அடுத்து, திரு. இராசமாணிக்கம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, பரிசுச் சீட்டுநடத்துவதன் மூலம் சென்ற ஆண்டு அரசுக்குக் கிடைத்த வருமானம் என்ன ? அந்த வருமானத்திலிருந்து எந்தெந்த காரியங்களுக்கு செலவு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்த இனங்களுக்கு என்று விரிவான விவரம் இல்லை. ஆனால் சென்ற ஆண்டின் மூலமாக அதாவது 1979-80-ல் பரிசுச் சீட்டின் மூலமாகக் கிடைத்த நிகர வருவாய் 1,64,30,818 ரூபாய். அதிலிருந்து சிறப்பு நிதிக்காக மாற்றப்பட்டது 1,23,23,114 ரூபாய் அதிலிருந்து குடிநீர் வழங்கு திட்டத்திற்கு 77,51,114 ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது.

[1981 பிப்ரவரி 28

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, பரிசுச் சீட்டு வருமானத்தின் மூலமாக வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு ஏதேனும் உதவி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவ ரவர்களே, நான் முதலிலே சொன்னபடி புயல் மற்றும் வெள்ள நிவாரண காரியங்களுக்காக ஓரளவுக்கு இதிலிருந்து நிதி தரப் பட்டு வருகிறது. ஆனால் எவ்வளவு தரப்படுகிறது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தர இயலும்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, பொதுவாக பரிசுச் சீட்டின் மூலம் வருகின்ற வருமானம் குறைந்துகொண்டு வருவதாலும், பரிசுச் சீட்டுகளை வாங்குகின்ற ஆர்வம் மக்க ளிடையே குறைந்து கொண்டு வருவதாலும் இப்பரிசுச் சீட்டு மக்களை ஈர்க்கின்ற வகையிலும் அதன்மூலம் வருவாயைப் பெருக்குகின்ற வகையிலும் அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவ ரவர்களே, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. எல்லா மாநிலங்களும் இப்படிப்பட்ட முயற்சி களில் ஈடுபட்டு வருகின்றன. பல மாநிலங்களிலிருந்து பரிசுச் சீட்டுகள் இங்கே நுழைகின்றன. எந்தெந்த மாநிலங்கள் நம் முடைய பரிசுச் சீட்டு விற்பனைக்கு அனுமதி அளிக்கின்றதோ அந்தந்த மாநிலங்களின் பரிசுச் சீட்டுகளை மட்டும் இங்கே அனுமதிப்பது என்று விதி வைத்திருக்கிறோம். ஆகவே நாம் நம்முடைய பரிசுச் சீட்டு திட்டத்தை நிறுத்திவிட்டாலும் மற்ற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் நுழைந்துவிடும். ஆகவே அகில இந்திய அளவில் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. நாம் இதிலே ஓரளவுக்கு நிதி திரட்டுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு வருகிறோம். அந்த வகையிலே 'பம்பர்' அதாவது 10 லட்சம் ரூபாய் திட்டம் என்பதை நாம் இரண்டு தடவைகள் தான் நடத்தினோம். ஆனால் மற்ற மாநிலங்களில் வாரத்திற்கு ஒரு முறை கூட இந்த மாதிரி நடத்துகிறார்கள். ஆகவே நாமும் அதை 15 நாட்களுக்கு ஒருமுறை நடத்தலாமா என்று முயற் சித்து வருகிறோம். அதிலே வெற்றி கிடைத்தால் தொடர்ந்து அவ்வாறு செய்யலாம்.

குடும்பக் கார்டுகளுக்கு கோதுமைப் பண்டங்கள் விநியோகம்.

*வினா எண். 303—திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) குடும்பக்கார்டுகளுக்கு ரவை, மைதாமாவு போன்ற கோதுமைப் பண்டங்களை நியாய விலைக் கடைகள் மூலமாக அரசு நிர்ணயித்த விலைகளில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதா ?